Registered as a Newspaper
யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை (17-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 252


## திருமலையில் உள்ள அகதிகள் உண்ணாவிரதப் பயமுறுத்தல்!

### பிரதேச செயலருக்கு மகஜர்

திருகோணமலை, ஓக. 17

கப்பல் வசதியின்றி திருகோணமலையில் நிர்க்கதி நிலையில் உள்ள சுமார் 750 அகதிகள் நாளை முதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முஸ்தீபு செய்து வருகின்றனர்.

உப்புவெளி முகாமில் அடிப்படை வசதியின்றி அல்லற்படும் இவர்களில் 500 பேர் கையொப்பம் இட்டு திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் வி. வேலும்மயிலுவுக்கும் நேற்று கையளித்த மகஜரிலேயே மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளனர்.

'எங்களை யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள் இல்லையேல் நாளை முதல் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போகிறோம்' என்று அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் — கப்பல் வசதியின்றி திருமலையில் தவம் கிடந்தவர்களில் சுமார் 50 அரச ஊழியர்கள் கப்பலில் யாழ். வர மன்னாருக்கு வந்துள்ளனர் என்றும்—

யாழ் பல்கலைக்கழக மாணவர்களிலும் 14 பேர் அங்கு தங்கியுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-173-164)

## பூந்தோட்டம் முகாம் நேற்று சுற்றிவளைப்பு!

### 6 இளைஞர்கள் கைதாகினர்

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள அகதிமுகாம்கள் நேற்று முன்தினம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

முகாமில் தங்கியுள்ள இளைஞர், யுவதிகள் விசாரிக்கப்பட்டு, தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புதுவிளாங்குளம் தாக்குதலில் குழந்தை உட்பட 8 பேர் காயம்

வவுனியா, ஓக: 17

நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு புதுவிளாங்குளம் சிவன் கோயில் பகுதியில் இடம்பெற்ற ''கிபிர்'' விமானத் தாக்குதலில் 10 மாதக் குழந்தை உட்பட 8 பேர் காயம் அடைந்தனர் என்று நேற்று தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு உட்பட பல நகரங்களில் ஐ. தே. கட்சி ஆர்ப்பாட்டப் பேரணி!

## ஜனாதிபதியின் கொடும்பாவி எரிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து 3 ஆண்டுகள் பூர்த்தி அடைந்த தினமான நேற்று கொழும்பிலும் நாட்டின் முக்கிய நகரங்களிலும் ஐ. தே. க. ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தியது. கொழும்பில் ஜனாதிபதியின் கொடும்பாவி எரிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து மூன்றாண்டுநிறைவுதினத்தை முன்னிட்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு உட்படநாடு முழுவதும் சுமார் 150 ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்தியது.

முக்கிய கூட்டங்களும் பேரணிகளும் கொழும்பிலேயே நடத்தப்பட்டன.

கொழும்பில் முக்கிய சந்திகளில் கலகம் அடக்கும் பொலீஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களினால்ஜனாதிபதியின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முக்கிய சந்திகளில் பாண்!

கொழும்பு, ஓக. 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து 3 ஆண்டுகள் பூர்த்தி அடைந்த நேற்றையதினம் கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளில் பாண் முக்கிய இடம் பெற்றது.

கொழும்பு நகரின் முக்கிய சந்திகளில் பாண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப அரசியலில் அரிசி எடுத்த இடம் இப்ப பாணுக்குப் போன ......!

# உயிலங்குளத்தில் புலிகள் தாக்குதல் படையினர் பதிலடியாக ஷெல் வீச்சு!

வவுனியா, ஓக: 17

வன்னியில் இருந்து மன்னார் நகருக்கு செல்லும் உயிலங்குளம் தடை முகாம் பகுதியில் நேற்றுக்காலை 9-30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 4 படையினர் உயிரிழந்தனர்; 4 படையினர் காயமடைந்தனர்

வழமைபோல் படையினர் வீதித்தடைகளை அகற்ற வந்த சமயம் இத்தாக்குதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து படையினர் மேற்கொண்ட ஷெல்தாக்குதலில் மன்னாருக்கு செல்ல உயிலங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மக்கள் சிதறி ஓடினர்.

மக்கள் தரித்து நின்ற ஆண்டான்குளம் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் நால்வர் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மனோரஞ்சன் (17 வயது), மேவின் மகிராஜ் (16 வயது) ஆகியோர் கடும் காயங்களுடன் சிகிச்சை பெறுகின்றனர்.

காயமடைந்த மற்ற இருவரின் விவரம் செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கவில்லை.

(இ-3-164)

## பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

### இரு கப்பல்கள் பெறப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 17

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இந்தச் சேவையை நடத்துவதற்காக இரு கப்பல்கள் கேள்விப்பத்திரம் மூலம் பெறப்பட்டுள்ளன என்றும்—

வடக்குக்கு சரக்குப் பொருள்களை ஏற்றி இறக்கும் கப்பல்கள் போன்ற பாரிய கப்பல்கள் இவை என்றும்—

இக்கப்பல்கள் கரையில் இருந்து 40 மைல் தூரத்தில் பயணம் செய்யக் கூடியவை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அமைப்பு ஒன்றின் பிரமுகர் சென்னையில் கைது!

சென்னை, ஜூலை 17

இலங்கையில் செயற்படும் தமிழ் அமைப்பு ஒன்றின் முக்கியஸ்தர் சென்னையில் ஒரு வீட்டில் வைத்து தமிழ் நாடு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை

யாழ்ப்பாணம், ஓக: 17

நாளை திங்கட்கிழமை பலாலியில் இருந்து கொழும்புக்கு இரு விமான சேவைகளும் செவ்வாய்க்கிழமையில் இருந்து தினமும் மூன்று விமான சேவைகளும் நடைபெறும் என சிவில் நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## துணை ஜனாதிபதியாக கிருஷ்ணகாந்த்

இந்தியத்துணை ஜனாதிபதியாக தற்போதைய ஆந்திரப் பிரதேச ஆளுநர் கிருஷ்ணகாந் தெரிவுசெய்யப்பட்டார்.

வாக்களிக்கத் தகுதிபெற்ற 779 பேரில் 760 பேர் வாக்களித்தனர். இவர்களில் 441 பேர் கிருஷ்ணகாந்திற்கும் 273 பேர் சுர்ஜித் சிங் பர்னாலாவுக்கும் வாக்களித்தனர். 46 வாக்குகள் செல்லுபடியற்றதாகின.

கிருஷ்ணகாந்தை ஆளும் ஐக்கிய முன்னணி, காங்கிரஸ் மற்றும் தோழமைக் கட்சிகள் ஆதரித்தன.

சுர்ஜித் சிங் பர்னாலாவை பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் ஆதரித்தன. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லைக் குமரன் மலர்-1997 வெளிவந்து விட்டது

விலை ரூபா 60.00

மலர் கிடைக்குமிடம்:-

1] நல்லூர் முருகன் ஆலய மேற்கு வீதி
2] யாழ. மா நகரசபை இந்து விடுதி
3] சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்
கண்டி வீதி, கச்சேரியடி.

தலைவர்,
சைவ சமய விவகாரக்குழு.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி/1334)

# லயன்ஸ் அலுவலக திறப்பு விழா

தென்மராட்சி, ஓஸ்ட் 17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் புதிய அலுவலகக் கட்டடம் சாவகச்சேரி தபால் அலுவலக வீதியில் நாளை திங்கட்கிழமை பி.ப 4.30 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

புதிய அலுவலகக் கட்டடத்தினைக்கழக மூத்த உறுப்பினர் லயன் டாக்டர் பே.பிலிப்ஸூம் கழக, பெயர்ப் பலகையை மூத்த உறப்பினர் லயன் சி. கா. நவரத்தினமும் திறந்து வைப்பர்.

கழகத்தினால் ஏற்கனவே நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில் கண்ணாடி வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவமும் நடைபெறும்.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்குவார்.

(ஐ-117)

# நீதிமன்ற ஊழியர்கள் பலர் வவுனியாவுக்கு திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓஸ்ட் 17

யாழ். நீதிமன்றம், ஊர்காவற்றுறை நீதிமன்றம், மல்லாகம் நீதிமன்றம் ஆகியவற்றில் கடமையாற்றிய ஊழியர்கள் சிலருக்கு வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு திடீர் இடமாற்ற உத்தரவுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 11 ஆம் திகதி முதல் இவர்கள் வவுனியா மேல் நீதி மன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. எனினும் அவர்களுக்கு கடிதம் நேற்று முன் தினமே கிடைத்தது.

யாழ். நீதிமன்றத்தைச் சேர்ந்த சுருக்கெழுத்தாளர் ஒருவர், எழுதுவினைஞர் ஒருவர் ஆகியோருக்கும், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் பதிவாளர் மற்றும் மல்லாகம் நீதிமன்றத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட பலருக்கு இந்த இடமாற்றக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் விரைவில் புதிதாக மேல் நீதிமன்றம் ஒன்று செயற்பட இருப்பதாலேயே இவர்கள் அங்கு கடமைக்கு அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

(ஐ-5)

# மலத்தியோன் வந்து சேர்ந்தது

யாழ். மலேரியா தடுப்பு இயக்க பிரிவுக்கு கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் ஒருதொகுதி மலத்தியோன் நுளம்பு கொல்லி மருந்து கடந்த வாரம் எடுத்து வரப் பட்டுள்ளது.

(ஐ-135)

# யாழ்ப்பாணம் வணிகர் கழகம் பொருள்கள் ஏற்றுவதற்கான கப்பல் சேவை

கொழும்பில் இருந்து ''மாஹோ'' கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவர விரும்பும் வர்த்தகர்கள், தமது விண்ணப்பத்தினை 20-08-97 புதன்கிழமை மாலை 3 00 மணிக்கு முன் எமது காரியாலயத்தில் கையளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

யாழ். மாவட்டத்தைச் சார்ந்த ஏனைய வணிகர் சங்க உறுப்பினர்கள் தமது சங்கத்தின் சிபார்சுடன் விண்ணப்பத்தை எமக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

கப்பற் கட்டணம் முற்பணமாகச் செலுத்தப் படுதல் வேண்டும். பொருள்களை உரிய காலத்தில் துறைமுகத்துக்குக் கொண்டு சென்று கப்பலில் ஏற்றுவதற்கு ஒழுங்கு செய்யத் தவறின் அந்தத் தாமதத்திற்கான குற்றப்பணம் அறவிடப்படும்.

கப்பலில் அனுப்பப்படும் சகல பொருள்களிலும் அல்லது பொதிகளிலும் தெளிவான குறியீடுகள் இடப்படல் வேண்டும்.

தி. குஞ்சிதபாதம்
தலைவர்

சி. நமசிவாயம்
செயலாளர்

(சி/1336)

ORGANIC CHEMISTRY
Mr N. மகேஸ்வரன்
HEAT
Mr. ஸ்பெல்மன்
SHAMROCK

(49045)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
இராமநாதன் நுண்கலைத்துறை

இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி/ பண்ணிசைக்கலைமணி
இசைமாணி/ நாட்டியமாணி/ பண்ணிசைமாணி

# புதிய அனுமதி 1996/97

மேற்படி அனுமதிக்கு விண்ணப்பித்த, தகுதியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு செய்முறை / நேர்முகப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

செய்முறை / நேர்முகப் பரீட்சைகள் ஆவணி மாதம் 22, 23, 25, 26, 27, 28 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளன.

அனுமதி அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரிகள் உடனடியாக பிரதிப் பதிவாளர் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- பதிவாளர்

15-08-1997

(சி/1333)

உ

# உபாகர்மம்

இடம்: இணுவில் சிவகாமி அம்மன் கோயில்
காலம்: 18 - 08 - 97 திங்கட்கிழமை.
நேரம்: காலை 10 மணி.

சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக்குருக்கள் [மயிலணி] நடத்தி வைப்பார்கள்

முக்கிய குறிப்பு:
பஞ்சபாத்திரம், உத்தரணி கொண்டுவருதல் வேண்டும் உபவீதம் இலவசமாக வழங்கப்படும்.

( 49054 ) தேவஸ்தானக் குருக்கள்

யாழ். மாவட்ட

# வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகம்

யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அருகாமையில் 18-08-97 திங்கள் காலையில் இருந்து இயங்கும் என்பதனை அறியத்தருவதோடு உரியவர்கள் அங்கு தொடர்பு கொள்ளவும்.

[காரியாலய நாள்கள் :- திங்கள், புதன், ஞாயிறு,]

- யாழ். மாவட்ட வே. அ. பட். சங்கம்.

[49050]

# மரண அறிவித்தல்

## சுந்தரலிங்கம சூரியகுமார்

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சூரிய
குமார் கனடாவில் 14 - 08 - 97 அன்று காலமானார்.
அன்னார் சுந்தரலிங்கம் — தேவி தம்பதிகளின்
அன்பு மகனும், துரைரெட்ணம் - காந்திமதி தம்பதி
களின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்
கணவரும், பிரேம்குமார், சங்கரி ஆகியோரின் பாச
மிகு தந்தையாரும், வசந்தகுமார் (சுவிஸ்), சிவகுமார்
(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விக்கி
னேஸ்வரராஜா, விக்னேஸ்வரி, ஆனந்தராஜா (சுவிஸ்)
ஆகியோரின் மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. விக்கினேஸ்வரராஜா
(மைத்துனர்)

75/A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(49052)

# மீண்டும் யாழ். நகரில்! புதிய சுபமாலா மோட்டோர்ஸ்

17-08-1997 முதல் இயங்குகின்றது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை எம்மிடம் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய சுபமாலா மோட்டோர்ஸ்
79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[49055]

# மாதாந்த பரீட்சை

3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L
வகுப்புகளுக்கான - ஆவணி மாதப் பரீட்சை
18-08-97 திங்கள் (போயா தினம்)
வழமைபோல் நடைபெறும்

பரீட்சைக்குப் பின் வினாத்தாள்கள் விடைகளுடன் பெறலாம்

பரீட்சைப்பகுதி BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம். (49057)

# ஆண்டு 5 புலமைப்பரிசில் '98

தற்பொழுது ஆண்டு 4 இல் படிக்கும் - 1998 இல் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்காக

## விசேட பயிற்சி வகுப்புகள்

★ இவ்வகுப்பில் அனுபவம்மிக்க ஆசிரியர்களது ஒருங்கிணைந்த சேவை.
★ வாரா வாரம் - ஊக்குவிப்புப் பயிற்சிகள்;
★ பயிற்சிப் பரீட்சைகள்.
★ பரீட்சையில் வெற்றியே இலக்கு.

வகுப்பு ஆரம்பம்: 27 - 08 - 97

இதற்கான அனுமதிப் பரீட்சை 23 - 08 - 97 சனி காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

அனுமதிப் பரீட்சையில் தோற்றி உயர்ந்த புள்ளி பெறும் முதல் 35 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி.

பரீட்சை பகுதி BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(49058)

# நன்றி நவிலல்

## அமரர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

(இளைப்பாறிய ஓவசியர்)

அமரர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களின் கொழும்பில் நடந்த மரணச்சடங்கிலும், யாழ். இரங்கல் திருப்பலிகளிலும் பங்கு பற்றித் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்து ஆதரவளித்த ஆயர்கள், குருக்கள், அருட் சகோதரிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், புனித ஹென்றி அரசர் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் திருமதி மலர் ஞானப்பிரகாசமும், பிள்ளைகள், குடும்பத்தினரும் தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றார்கள்.

அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசம்
குடும்பத்தினர் சார்பில்,

இளவாலை. (49053)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தர் சிலை இடிந்து மூவர் மரணம்

பாங்கொக், ஒக. 17

தாய்லாந்தின் வடபகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த 84 அடி உயரமான புத்தர் சிலை ஒன்று திடீரென இடிந்து வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்தனர். ஏழு பேர் காயமடைந்தனர்.

பாங்கொக் நகரில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நொங்பே ஆலயத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சிலை இடிந்ததற்கான காரணத்தை பொலீஸார் விசாரித்து வருகின்றனர். 6 கோடி மக்களைக் கொண்ட தாய்லாந்து சனத்தொகையில் 90 வீதமானோர் பௌத்தர்களாவர். (ஐ)

காலக்கெடு முடிவடைந்தது:

# வீரப்பன் வசமுள்ள கைதிகளை மீட்க அதிரடிப்படை தயார் நிலையில்!

சென்னை, ஒக. 17

5 கோடி ரூபா பணத்தைத் தராவிடில் தன் வசமுள்ள கர்நாடக வனத்துறை அலுவலர்கள் எட்டுப் பேரையும் கொலை செய்துவிடப் போவதாகக் கூறி வீரப்பன் விதித்திருந்த காலக்கெடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது.

வீரப்பனின் கோரிக்கையை கர்நாடக, தமிழக அரசுகள் நிராகரித்து விட்டன.

இதனையடுத்து—

காட்டுக்குள் அதிரடியாகப் புகுந்து கைதிகளைப் பாதுகாப்பாக மீட்டுவர விசேட அதிரடிப்படைப் பிரிவு ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச உயர் மட்டத்தில் இருந்து அனுமதி கிடைத்தவுடன் மீட்புத் திட்டத்தைச் செயற்படுத்த படையினர் ஆயத்தமாக உள்ளனர்.

உலக அரங்கில்

கர்நாடக மாநிலத்தின் முன்னாள் பொலீஸ் ஆணையாளரும், தற்போதைய புலனாய்வுத்துறை ஆணையாளருமான சங்கர் பிதாரி கடந்த வாரம் திம்மம் பகுதியில் உள்ள அதிரடிப்படை முகாமுக்கு திடீர் விஜயம் செய்து அதிகாரிகளுடன் இது குறித்து ஆலோசனை நடத்தினார்.

அரசு எடுக்கும் முடிவுக்கு ஏற்ப எந்நேரமும் காட்டுக்குள் புகுந்து கைதிகளை மீட்க கர்நாடக அதிரடிப் படை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காளான் உண்ட 21 பேர் பலி!

மொஸ்கோ, ஒக. 17

ரஷ்யாவில் காளான் உணவு வகைகளை உட்கொண்ட 21 பேர் உயிரிழந்துள்ளனர். 90 பேர் வரை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவில் தற்போது காளான் சீஸன் ஏற்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் இக்காலப் பகுதியில் பல வகையான காளான்கள் குடை விரிக்கின்றன. பெரும்பாலானோர் இவற்றை விரும்பிச் சுவைக்கின்றனர்.

ஆனால் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய விஷத் தன்மை கொண்ட காளான்களும் இவற்றில் அடங்கும். இத்தகைய காளான்களைச் சாப்பிட்டவர்களில் பலர் உயிரிழந்துள்ளனர்.

சுதந்திரதினப் பொன்விழாச் சிறப்புரையில்

# ஊழலை ஒழிக்க மக்களை அணிதிரளுமாறு இந்தியஜனாதிபதியும், பிரதமரும் அறைகூவல்!

புதுடில்லி, ஓகஸ்ட் 17

"அரசியலிலும், பொதுவாழ்விலும் மலிந்து போயுள்ள லஞ்சஊழல்களில் இருந்து தேசத்தை மீட்க மாபெரும் மக்கள் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும். அதன் மூலம் மட்டுமே இந்தியாவை சுத்திகரிக்க முடியும்."

இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணனும், பிரதமர் இந்தர் குமார் குஜ்ராலும் மேற் கண்டவாறு அறைகூவல் விடுத்துள்ளனர்.



சுதந்திரப் பொன் விழாவை ஒட்டி தனித்தனியாக ஆற்றிய சிறப்புரைகளின் போதே அவர்கள் இருவரும் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி நள்ளிரவு இந்தியா சுதந்திரம் பெற்றதைக் குறிக்குமுகமாக — அன்றைய நாள் நிகழ்வை அப்படியே மீண்டும் கண்முன் காட்சிப்படுத்துமுகமாக — இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளினதும் கூட்டு அமர்வு வியாழன் நள்ளிரவு இடம்பெற்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்நிகழ்வில் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் சிறப்புரை ஆற்றினார்:

"ஊழல், சமூகப் பிரிவினை, சாதிப் பிரிவினை, அரசியலிலும், அன்றாட வாழ்விலும் தீங்கியல் கலத்தல் என்பவற்றுக்கு எதிரான எமது போராட்டத்தில் மக்கள் தான் முன்னணியில் நிற்க வேண்டும்.

"ஒரு சமுதாய இயக்கம், அல்லது பரவலான ஒரு தேசிய இயக்கம் மூலமே இந்தியாவைச் சுத்திகரிக்க முடியும்" — என்று ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டார்.

சுதந்திர தினமான நேற்று முன்தினம் காலை வரலாற்றுச் சிறப்பு மிக்க டில்லி செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து பிரதமர் குஜ்ரால் நாட்டு மக்களுக்கு சுதந்திரதினச் சிறப்புரையாற்றினார்.

நாட்டில் ஊழலை ஒழிக்க மாபெரும் மக்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்குமாறு அப்போது அவர் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

"ஊழலுக்கு எதிரான எங்கள் போராட்டம் துணிச்சலானது; நேர்மையானது; ஒளிவு மறைவு அற்றது ஊழலை ஒழிக்க மிகப் பெரும் மக்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பிப்போம். அரசியல் வாதிகள் மத்தியிலும் பொது வாழ்விலும் இன்று காணப்படும் ஊழல் அழிக்கப்படுவதற்காக நாம் அனைவரும் இந்த இயக்கத்தில் அணிதிரள வேண்டும்.

ஊழல் எங்கு காணப்பட்டாலும் — அமைச்சரவையில் காணப்பட்டால் கூட — பொது மக்கள் அதுபற்றி முறைப்பாடு செய்ய வேண்டும்.

"மிகப்பெரிய அளவிலான ஊழல் சம்பவங்களை மட்டுமன்றி நாளாந்த வாழ்வில் இடம்பெறும் சிறு சிறு ஊழல்களை — வாழ்வை நரகமாக்கும் சில்லறை லஞ்சங்களை பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன்" — என்று பிரதமர் குஜ்ரால் தமது உரையில் குறிப்பிட்டார்.



நாராயணன்

பொன்விழா கொண்டாட்டங்களை ஒட்டி சிறப்பு நாணயங்கள், முத்திரைகள் வெளியிடப்பட்டன. மாநிலங்களின் தலைநகரங்களில் முதலமைச்சர்கள் தலைமையில் சுதந்திர தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### தமிழ் நாட்டில்

சுதந்திர தினப் பொன்விழாக் கொண்டாட்டங்கள் தமிழ் நாட்டிலும் சிறப்பாக நடைபெற்றன.

சென்னையில் தலைமைச் செயலகம் அமைந்துள்ள புனித ஜோர்ஜ் கோட்டையில் முதல்வர் கருணாநிதி தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

550 சிறைக்கைதிகளுக்கு விடுதலையையும் சுமார் 3 ஆயிரம் கைதிகளுக்கு தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுவதாக அப்போது அவர் அறிவித்தார்.

ஆயிரத்து 50 மீற்றர் நீளமான இந்திய தேசியக் கொடியை தி. மு. க. தொண்டர்கள் அண்ணா சமாதிக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

சுதந்திர விழா நடைபெற்ற பகுதியில் தீவிர பொலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. விழாவிற்கு வருகை தந்த மக்கள் அனைவரும் வெடிகுண்டு கண்டுபிடிக்கும் கருவியால் சோதனை செய்யப்பட்டனர். (ஐ)

★ நச்சு ஊசி ஏற்றி

## 18 நோயாளிகளைக் கொன்ற பெண் தாதி!

### எகிப்தில் திடுக்கிடும் சம்பவம்

அலெக்சான்டிரா, ஓகஸ்ட் 17

நோயாளிகள் எழுப்பும் சத்தத்தை சகிக்க முடியாத மருத்துவத் தாதி ஒருவர் நச்சு ஊசி ஏற்றி 18 நோயாளிகளைக் கொன்றுள்ளார்.

எகிப்து நாட்டின் அலெக்சான்டிரா நகரில் உள்ள மருத்துவ மனை ஒன்றிலே இந்தத் திடுக்கிடும் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

42 வயதான மேற்படி தாதிப் பெண் மருத்துவ மனையில் இருந்து திருடிய இனந் தெரியாத நச்சுப் பொருள் ஒன்றை நோயாளிகளின் உடலில் ஊசி மூலம் செலுத்தியதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

உடலில் நச்சு மருந்து கலந்ததால் இந்த மரணங்கள் சம்பவித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இரவுக் கடமையின் போது நோயாளிகள் எழுப்பும் கூச்சலை தம்மால் சகிக்க முடியாது இருந்ததாக அப்பெண் தாதி பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

# இந்திய அரசு ஆட்டம் கண்டுள்ளது; ஒரு சில மாதங்களில் அங்கு தேர்தல்!

### 'புரொண்ட் லைன்' ஆசிரியர் ராம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 17

இந்திய மத்திய அரசு மிகவும் ஆட்டம் கண்ட நிலையில் காணப்படுகிறது. அடுத்த ஒரு சில மாதங்களில் அங்கு பொதுத்தேர்தல்கள் நடைபெறும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

"புரொண்ட் லைன்" சஞ்சிகையின் ஆசிரியர் என். ராம் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு இனக்கல்விக்கான சர்வதேச நிலையத்தில் புதுடில்லியில் இடம்பெற்ற [illegible] தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்திடம் மக்கள் பலவற்றை எதிர்பார்த்தனர். ஆனால் அவை கிடைக்கவில்லை. குஜ்ரால் மிகவும் பின்தங்கிவிட்டார். கூட்டரசாங்கம் மிகவும் ஆட்டம் கண்ட நிலையில் இருக்கிறது.

நிதி அமைச்சர் சிதம்பரம் பொருளாதாரக் கொள்கைகளைச் சரிவர செயற்படுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார். பொருளாதாரக் கொள்கைகளுக்கு பாரதீய ஜனதாக் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சி நாளுக்குநாள் பலம் வாய்ந்ததாக மாறிவருகின்றது. தனிப்பட்ட முறையில் சீதாராம் கேசரி பலம் வாய்ந்தவராக மாறி வருகிறார். மக்கள் மத்தியிலும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு பெருகி வருகிறது.

சோனியா காந்தி நினைத்தால் கட்சிக்குள் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியும். காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன — என்று ராம் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுஜன ஒன்றியம் ஜெனிவாவுக்கு மகஜர்

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொளளும் கொடுமைகளை நிறுத்தக் கோரி வன்னிப் பகுதியில் உள்ள வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் செயலகத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள கொடுமைகளைக் கண்டிக்க வேண்டும் என்றும் — படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களை கண்டுபிடிக்க முயற்சி எடுக்குமாறும் — அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. (ஐ-164-3)

# 240 ஆசிரியர்களுக்கு குடாநாட்டில் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 17

வடக்கு - கிழக்கில் அடுத்த தவணையில்ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 240 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட உள்ளது.

மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் சு. டிவகலாலா இதனைத் தெரிவித்தார்.

கல்விச் சேவைக் குழுவால் 96 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் இருந்து இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் விவரம் அடங்கிய பட்டியல் அடுத்த வாரம் மாகாண சபைக்கு கிடைக்கும் என்றும் —

நேர்முகப்பரீட்சைகளை அந்த அந்த மாவட்டத்தில் மாகாணக் கல்வி அமைச்சு விரைவில் நடத்தும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## சிரமதானம்

திருநெல்வேலி, ஓக: 17

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் விரைவில் ஆரம்பமாகவுள்ளதை முன்னிட்டு ஆலய சுற்றாடல் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் சூழல் பாதுகாப்புக் குழுவினர் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆலய சுற்றாடல் பகுதியைச் சிரமதான மூலம் துப்புரவு செய்யவுள்ளனர் (ஐ-135)

## அறிவியல் கருத்தரங்கு

இணுவில் தெஸ்பியன் கலை வட்டத்தினர் ஏற்பாடு செய்துள்ள மாதாந்த அறிவியல் கருத்தரங்குத் தொடரில் எட்டாவது கருத்தரங்கு நாளை திங்களன்று பிற்பகல் 3 மணிமுதல் இணுவில் தெஸ்பியன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் "ஸ்ரெனிஸ் லாவ்ஸ்கி முறைமையில் நடிப்பும், நெறியாள்கையும்" என்ற தலைப்பில் குழந்தை ம. சண்முகலிங்கம் கருத்துரை வழங்குவார்.

# வலி. வடக்கில் கண்டபடி மரங்கள் தறிப்பு!

மல்லாகம், ஓக. 17

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மரங்கள் கண்டபடி தறிக்கப்படுவது அதிகரித்து வருகிறது.

மல்லாகம் சந்திக்கு வடக்கேயும், துர்க்கை அம்மன் கோயிலடி மற்றும் அளவெட்டிப் பகுதியிலும் அண்மையில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் பயன்தரும் மரங்கள் விறகுத் தேவைக்காகவும், வியாபார நோக்கமாகவும் தறிக்கப்படுவதைக் காணமுடிகிறது.

இப்பகுதிகளில் கிராம அலுவலர்களின் கண்காணிப்பு அற்ற நிலை இருப்பதால் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ-86)

# உதை பந்தாட்டப் போட்டிகளை மீண்டும் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17

யாழ். உதை பந்தாட்ட லீச், அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்த ஆயத்தமாகி வருகிறது.

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டி, 13 வயதுக் குட்பட்டோருக்கான போட்டி, தலைவர் கிண்ணப் போட்டி, டாக்டர் பிலிப் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான போட்டி உட்பட வழமையாக நடத்தப்பட்டு வந்த சகல போட்டிகளும் மீண்டும் நடத்தப்படவுள்ளதாக லீக்கின் தலைவர் எஸ். கணநாதன் தெரிவித்தார்.

அங்கத்துவ கழகங்கள் தமது பிரதிநிதிகள் ஊடாக சச்சமோட்டை வீதியில் உள்ள உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கப் பணிமனையில் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

லீக்கின் தலைவராக த. கணநாதனும், செயலாளராக எம். பிரான்ஸிசும், பொருளாளராக பி. ஜேக்கப்பும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் 11 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர். (ஐ)

## சடலம் ஒப்படைப்பு

உடுப்பிட்டிப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பொலீஸாரால் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. சடலத்தின் பல பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

# மருத்துவ வசதிகள் இன்றி வாடும் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள்

வடமராட்சி கிழக்கு நீண்ட பரந்த பிரதேசம். இதன் எல்லை சுண்டிக்குளத்தில் இருந்து வல்லிபுரக் கோயில் முன்னரங்க வீதி வரை பரந்துள்ளது. இப்பகுதியில் இரண்டு வைத்திய சாலைகள் மட்டுமே உள்ளது. இவற்றில் ஒன்று மருதங்கேணி கிராமிய வைத்திய சாலை. மற்றையது அம்பன் மத்திய மருந்தகம். இந்த இரண்டு வைத்திய சாலைகளை நம்பியே இப்பகுதி மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்த இரண்டு வைத்தியசாலைகளில் கூட போதிய வசதிகள் எவையும் இருக்கவில்லை. யாழ். குடாநாட்டிலேயே அடிப்படை வசதிகள் மிகவும் குறைந்த வைத்திய சாலைகள் என இவை இரண்டையும் கூறலாம்.

முதலில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையையும், இப்பிரதேச நிலையையும் ஆராய்தல் அவசியம். மருதங்கேணி வைத்தியசாலையை நம்பியே வெற்றிலைக்கேணியில் இருந்து செம்பியன்பற்று வரையிலான மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனையிறவுச் சமர் தொடங்கி வெற்றிலைக் கேணியில் படையினர் நிலை கொண்ட பின்னர் வெற்றிலைக்கேணியில் இருந்து உடுத்துறை வரை வசித்து வந்த மக்கள் தாளையடி, செம்பியன் பற்று, மாமுனைப் பகுதிகளில் குடியேறினர். இவ்வாறு குடியேறிய மக்களின் மருத்துவப் பிரச்சினைகளைத் தீர்த்து வந்தது மருதங்கேணி வைத்தியசாலைதான்.

மருதங்கேணி வைத்திய சாலையின் பிரசவ விடுதியில் 6 கட்டடங்கள் மாத்திரமே இருந்தன. ஆண்கள் வார்ட்டில் 10 கட்டில்களுடன் இவ் வைத்தியசாலை இயங்கி வந்தது.

'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த போது இப்பகுதி மக்களில் 80 சதவீதமானவர்கள் வன்னிப்பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர். இதனால் இவ் வைத்திய சாலை சிலகாலம் முற்றாக இயங்காமல் இருந்தது. பின்னர் மீண்டும் தற்போது இயங்கி வருகிறது. எனினும் போதிய வசதிகளின்றியே இவ்வைத்தியசாலை இயங்குகின்றது.

கடந்த ஒரு வருடமாக இங்கு மருத்துவமாது இல்லை. இதனால் தாளையடி, வத்திராயன், மருதங்கேணி, சோரன்பற்று, மாசார் பகுதிகளைச் சேர்ந்த பிரசவத் தாய்மார் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். இங்கு கடமையாற்றிய மருத்துவ மாது வன்னிக்கு இடம் பெயர்ந்துவிட்டார். பதில் கடமைக்கு நியமிக்கப்பட்ட மருத்துவமாது பாதுகாப்பு மண் அணைக்கு வெளியே வசிப்பதால் வைத்திய சாலைக்குச் செல்ல முடிவதில்லை. இதனால் இப்பகுதிப் பிரசவத் தாய்மார் ஒன்பது மைல்களுக்கு அப்பாலுள்ள பளை பிரசவ விடுதிக்கு பெரும் கஷ்டத்தின் மத்தியில் செல்கின்றனர்.

## செய்தி மடல்

இது தவிர இப்பகுதியில் மலேரியா, வயிற்றோட்டம் என்பன அதிகரித்து வருவதாக வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவசர நோயாளரைக் கொண்டு செல்ல அம்புலன்ஸ் வண்டி இங்கு இல்லை. போக்குவரத்துப் பிரச்சினையால் சில கடும் நோயாளிகள் வீணாக உயிரிழக்கும் ஆபத்து உள்ளது.

அம்பன் மத்திய மருந்தகத்தின் நிலைபற்றி அறிவதற்காகவும் நோயாளர்களின் பிரச்சினைகள் பற்றித் தெரிந்து கொள்வதற்காகவும் அங்கு சென்றேன். அங்கு வைத்திய அதிகாரியின் அலுவலகம் பூட்டிக் கிடந்தது. வெளிநோயாளர் பிரிவில் பலர் வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

ஒரு வயோதிபத் தாயிடம் சென்று "அம்மா, எங்கிருந்து வந்தீர்கள்" என்று கேட்டேன்.

"தம்பி!, ஒருமாதமாக டாக்குத்தர் வரேலை நான் உதிலை கிட்டடியில்தான் இருக்கிறனான். எனக்கு இரண்டு கிழமையாய் ஒரே காய்ச்சல்" என்று அவர் பதிலளித்தார்.

"ஏன் அம்மா நீங்கள் பருத்தித்துறைக்குப் போய் மருந்து எடுக்கலாம்தானே" என்று கேட்டேன்.

"தம்பி இரண்டு தடவை போய் திருப்பி அனுப்பிப் போட்டினம் வருத்தம் எண்டு சொல்லவும் படையினர் எவ்வளவு உவ்வே விடவில்லை. இரண்டு தரமும் போய் வர வானுக்கு 300 ரூபா எடுத்துப் போட்டினம். இனி வானில் போறதுக்கு காசும் இல்லை போய் திரும்பித்தான் வர வேணும்" என சோகமாகக் கூறினார் அந்த 65 வயதான குடத்தனையைச் சேர்ந்த வயோதிப மாது.

மாமுனையில் இருந்து மணற்காடு வரையான நீண்ட பிரதேசத்தில் உள்ள மக்கள் நம்பியிருப்பது அம்பன் மத்திய மருந்தகத்தை மட்டுமே. இவர்கள் மருதங்கேணிக்கோ அன்றிப் பளைக்கோ செல்ல தாளையடியிலிருக்கும் படையினர் அனுமதிப்பது இல்லை. இதேபோல் பருத்தித்துறையில் உள்ள மந்திகை வைத்தியசாலைக்குச் செல்ல வல்லிபுரக் கோயில் காவலரணில் உள்ள படையினர் அனுமதிப்பதில்லை. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் இக்கட்டான சூழலில் உள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களில் 4 குழந்தைகள் மருத்துவ வசதியின்றி பரிதாப மரணமடைந்துள்ளன.

இப்பகுதியில் தனியாக வைத்தியசாலைகள் கூட இல்லை, எனவே இந்தப் பகுதி மக்களின் துயர்நீங்கி மருத்துவ வசதி கிடைக்குமா? என்பதே இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தொற்று நோய்கள் வேகமாகப் பரவும் பகுதி இப்பகுதி. எனவே வெள்ளம் வர முன்னர் அணையிடுவது அவசியமாதலால் இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கரிசனை எடுத்தல் மிக மிக அவசியம்.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களான ஐ. நா. தூதரகமும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்றவையும் இப்பகுதி மக்களின் மருத்துவ நிலையைக் கவனத்தில் எடுப்பது அவசியமான ஒன்றாக உள்ளது. எனவே துன்பக் கடலில் மூழ்கியிருக்கும் இப்பகுதி மக்களின் துயர்நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதே இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

-- செம்பியன்பற்றுச் செய்தியாளர் --


# வாழ்த்துகின்றோம்

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றிருக்கும்
எமது கழகத்தின் போஷகரும்
தேவாலய வீதி, சங்கானையைச் சேர்ந்தவருமான
உயர்திரு.
பொன்னையா கனகரத்தினம் (J. P.)
அவர்களை
வாழ்த்தி வரவேற்கின்றோம்.
சங்கானை
ஜுப்பிற்றர் விளையாட்டுக் கழகம்
(49036)

# VESPA விற்பனை

உங்கள் மொடலையும் கலரையும் தெரிவு செய்து
முன்கூட்டியே முற்பணம் செலுத்தி பதிவு செய்யுங்கள்

VESPA LML — Nv - SPL, Rs 73, 000/-
VESPA LML — T5 - SPL, Rs. 85, 000/-
VESPA LML — SELECT, Rs. 87, 500/-

V. நடராஜா, சட்டத்தரணி
நெருங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:
JAFFNA ELECTRICAL'S
STANLEY ROAD, JAFFNA.
(49017)

# வடபிராந்திய சிகைஅலங்கரிப்பாளர்சங்கம் யாழ்ப்பாணம்

9 - 7 - 97 இல் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்ட தீர்மானத்தின்படி பின்வரும் முறைப்படி மாத சந்தாப்பணம் வசூலிக்கப்படும் என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| கடை உரிமையாளர் | 50.00 |
| தொழிலாளர் | 25 00 |
| கிராமியத் தொழிலாளர் | 25 00 |
| கொமிசன் கடை உரிமையாளர் | 25 00 |

க. சிறீராஜன்,
செயலாளர்.
(சி/ 1330)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சண்டை விமானங்கள் கொள்வனவு!

★ மேலும் 25 ஆயிரம்பேர் சேர்ப்பு!

# விமானப்படை விரைவில் நவீன மயமாக்கப்படும்!

## தளபதி ஒலிவர் ரணசிங்க அறிவிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 17

21 ஆம் நூற்றாண்டில் சிறந்த சேவையை ஆற்றக்கூடிய வகையில் ஸ்ரீலங்கா விமானப் படை நவீனமயமாக்கப்படவுள்ளது.

மேலும் 25 ஆயிரம் பேர் விமானப்படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். வெளி நாடுகளில் இருந்து நவீன சண்டை விமானங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

விமானப்படைத் தளபதி எயர் மாஷல் ஒலிவர் ரணசிங்க இத்தகவல்களை வெளியிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்த விவரங்களை வெளியிட்டார்.

விமான விபத்துக்கள் காரணமாக நல்ல அனுபவம் வாய்ந்த 17 விமானிகளை நாடு இழந்துவிட்டது. இருந்தபோதும் விமானப் படை எவ்விதமான தங்கு தடையுமில்லாமல் தனது சேவைகளை வழங்கி வந்தது.

21 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் விமானப் படை நவீனமயமாக்கப்படவுள்ளது. நவீன சண்டை விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. கடற்பகுதியில் பாதுகாப்பை மேற்கொள்வதற்கு இவை அவசியமாகும்.

இதேவேளை விடுதலைப் புலிகள் கடல் வழியாக மேற்கொள்ளும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த நவீன ஜெற் விமானங்கள் பெரிதும் உதவியாக இருக்கும்.

விமானப்படை விமானிகளின் எண்ணிக்கை இன்னும் ஒன்றரை வருடத்தில் 250 பேராக அதிகரிக்கப்படவுள்ளது. விமானிகளுக்கும் பயிற்சியளிக்கும் விசேட திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள புக்காரா, கிபீர் ஆகிய விமானங்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும்.

அடுத்த சில ஆண்டுகளில் விமானப்படையினரின் எண்ணிக்கையை 25 ஆயிரமாக அதிகரிப்பது என்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஏற்கனவே 3 ஆயிரத்துக்கும் அதிகமான விமானப் படையினர் ஈடுபட்டிருக்கின்றனர். என்று விமானப்படைத் தளபதி தெரிவித்தார்.

(ஐ 5)

## கைதானோர் சிலரின் சைக்கிள்களைப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ், குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு தொகுதியினரின் சைக்கிள்கள் மற்றும் பொருள்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். ஈ. பி. டி. பி அலுவலகத்தில் வைத்து ஒப்படைக்கப்படவுள்ளன.

உரியவர்கள் அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்கள் வந்து அவற்றை பொறுப்பேற்கும்படியும் —

அவ்வாறு அன்றைய தினம் பொறுப்பேற்கப்படாவிட்டால் அவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகண்ணன் (சுதுமலை தெற்கு)
★ முத்தையா ரவிச்சந்திரன் (தபாற்கந்தோர் வீதி, கொக்குவில்)
★ ராஜரட்ணம் கோபாலரத்தினம் (சிவகுரு குறுக்கு ஒழுங்கை.)
★ இராசையா யோகேஸ்வரன் (391, மீசாலை வடக்கு கொடிகாமம்.)
★ வேலாயுதம் அமலதாஸ் (உடுவில்)
★ ரத்தினம் அருந்தவகுமார் (கைதடி கிழக்கு)
★ தேவராணி நல்லையா (கோப்பாய் தெற்கு.)
★ சண்முகசுந்தரம் சிவசுந்தரம் (கைதடி தெற்கு)
★ அந்தோனிப்பிள்ளை தெனிதுரம் (குருநகர்)
★ சங்கரப்பிள்ளை ராசரத்தினம் (மீசாலை வடக்கு, கொடிகாமம்)
★ வேலுகணேஸ் (முகமாலை)

இவர்களுடன் வெங்கடாசலம் செல்வம் (விஸ்வமடு, பாரதிபுரம்) என்பவரது இரு பொக்கட் றேடியோவும், நந்தன் ரவிக்குமார் (கச்சாய் வடக்கு, கொடிகாமம்) என்பவரது ஒரு ரேப் அளவையும், ஒரு கைப்பையும் உள்ளன.

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்க 6லட்சம் ரூபா

திருநெல்வேலி, ஓக. 17

யாழ். மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இவ்வருடத்திற்கான உதவி நன்கொடைப் பணத்தை வழங்குவதற்காக திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் அண்மையில் ஆறு இலட்சத்து ஆயிரத்து 800 ரூபா நிதியை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை ஊடாக அனுப்பி வைத்துள்ளது.

யாழ். பிராந்தியத்திலுள்ள பிரதேச சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இவ்வருட உதவி நன்கொடைப்பணத்தைதத்தமது பிரிவில் இயங்கி வரும் சனசமூக நிலையங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்து இந்த நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

(ஐ-135)

## பெருமளவு கசிப்புடன் 11பேர் யாழ். நீதிமன்றில் ஆஜர்!

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ். குடாநாட்டில் நீர்வேலி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் சட்டவிரோதமாகக் கசிப்பு காய்ச்சியவர்கள் என்றும் அதற்குத் தேவையான கோடா போன்ற பொருள்களை வைத்திருந்தார்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்ட 11 பேர் கடந்த வியாழனன்று யாழ். நீதிமன்றத்தில் கோப்பாய் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் கசிப்புக் காய்ச்சுவதற்காக வைத்திருந்த பொருள்கள் மற்றும் அதற்குரிய உபகரணங்கள் யாவும் பொலீஸாரால் நீதிமன்றத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தன. அத்துடன் காய்ச்சப்பட்ட நிலையில் இருந்த பெருமளவு கசிப்பும் கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் நீதிமன்றம் முழுவதும் கசிப்பு வாடை வீச அங்கு நின்றவர்கள் பலர் அசௌகரியத்துக்குள்ளானார்கள்.

பொலீஸார் கசிப்பு காய்ச்சுகின்ற இடங்களுக்குச் சென்ற போது அதில் ஈடுபட்டு வந்த ஆண்கள் தலைமறைவாகி விடவே அங்கு நின்ற அவர்களது மனைவிமார் மற்றும் பெண்களே பொலீஸாரால் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

யாழ். நீதிபதி ஏ. என். இராமச்சந்திரன் வழக்குகளை விசாரித்தார். அவர்களிடம் குற்றப்பணம் அறவிடப்பட்டது.

யாழ். குடாநாட்டில் தற்போது கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

## விடைத்தாள் திருத்துவோருக்கு

தற்சமயம் நடைபெறும் ஜி. சி. ஈ (உயர்தர) பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணிக்காக அடுத்த மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் சமுகமளிக்க வேண்டியவர்கள் யாழ். சிவில் நிர்வாக அலுவகத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கும் பரீட்சைப் பகுதியில் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்துடன் நியமனக் கடிதத்தின் நிழற்படப் பிரதியையும் சமர்ப்பிக்குமாறுகோரப்பட்டுள்ளது.

## கத்திவெட்டினால் படு காயம்

யாழ்ப்பாணம். ஒக.17

காணித்தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதம் கத்திவெட்டில் முடிவடைந்தது.

கொக்குவில் தேங்காய் மூலை என்னுமிடத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஐயம்பிள்ளை நாகராசா (வயது 40) என்பவர் கத்திவெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

### செயலகம் ஊடாக அனுப்பியோருக்கு

## விசேட அடையாள அட்டை இன்னும் கிடைக்கவில்லை

பிரதேச செயலகங்கள் மூலம் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பலருக்கு இன்னும் விசேட அடையாள அட்டைகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் பிரதேச செயலக பிரிவில விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னும் அவை கிடைக்கவில்லை என்று பலர் தெரிவித்தனர்.

விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து நீண்ட காலமாகியும் அது கிடைக்காதவர்கள் மீண்டும் விண்ணப்பம் செய்யலாமா? என்பது குறித்து உரிய அறிவுறுத்தல்களை மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

(ஐ-86)

### நல்லூர் செயலகப் பிரிவில்

## ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

மல்லாகம், ஒக, 17

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் கொடுப்பனவு ரூபா 5 ஆயிரம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்ட பதினாறு கிராம அலுவலர் பிரிவு தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே வழங்கப்படவுள்ளது.

மணியந்தோட்டம், பூம்புகார் கிராம அலுவலர் பிரிவு மக்கள் இன்னும் மீளக் குடியேறாமையினால் அப்பிரிவுகள் தவிர்ந்த ஏனைய 26 பிரிவுகள் ஒவ்வொன்றிலும் தலா 56 குடும்பங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்காக கிராம அலுவலர்களினால் முன்னுரிமைப் பட்டியல் புதிதாக தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(ஐ-86)

# சூழலைக் கண்டு துவளாதீர்கள்; நம்பிக்கையை மேலும் வளருங்கள்!

### ஞாயிறு நற்பிரசாதம்

கி. மு. 586 ஆம் ஆண்டளவில் எருசலேம் நகருக்கு மாபெரும் அழிவு ஏற்படுகின்றது. நெபுகாத்நெசார் தலைமையில் எருசலேம் முற்றுகையிடப்படுகிறது. நாட்டிலோ பஞ்சம்; நகரத்தின் அரசனோ ஓடிப்போனான். பட்டினத்தின் கோட்டைகள் அழிக்கப்பட்டு விட்டன. சிறை வாசிகளாக பல மக்கள் மாறவேண்டியிருந்தது. பிற நாட்டு உதவிகள் எதிர்பார்க்கப்பட்டும் கிடைக்கவில்லை. புலம்பல் ஐந்தாம் அதிகாரத்தினை வாசித்தால் மக்கள் அனுபவித்த கொடுரங்களை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நெபுக்காத்நேசாரின் படைகள் இளைஞர்களைக் கொண்டு வேலை வாங்கியது. வாலிபர்கள் விறகு சுமந்து இடறி விழுந்தனர். மூப்பர்கள் மதிக்கப்படவில்லை. இசைக்குழுவில் இருந்து வாத்தியக் கருவிகளை மீட்டி மற்றவர்களை மகிழ்விக்கும் இளைஞர்கள் இப்போது அப்படிச் செய்வதில்லை. ''எங்கள் தாய்மார் விதவைகளைப் போல உள்ளனர்'' என புலம்பல் 5 ஆம் அதிகாரத்தில் கூறப்படுகிறது.

ஆம் தங்கள் கணவன்மார் இருக்கின்றார்களா? என்று கூட அப்பெண்களுக்குத் தெரியவில்லை. போரின் கொடூரம் மக்களை இடம்பெயரச் செய்த போது, மக்கள் தமது கால் போன போக்கில் ஓடினர். ஒருவர் மற்றவரைக் கவனிக்க முடியாத நிலை. பலர் நாடு கடத்தப்பட்டனர். இதன் மத்தியில் தமது கணவன்மார் உயிருடன் உள்ளனரா இல்லையா எனத் தெரியாமல் தவித்துக் கொண்டு பல பெண்கள் விதவைகளைப் போல வாழ்ந்தனர். அனைவரின் முகங்களும் அடுப்பங்கரையைப் போல கறுத்துப் போனது. 'சீயோனில் நரிகள் ஓடித்திரிகின்றன, எனும் வசனம் இந்த நாட்டின் அழிவை வெகு துலாம்பரமாக எடுத்துரைக்கிறது.

அதாவது நாடு மயானமாக மாறிவிட்டது. எங்கும் பிணக்குவியல்களின் காட்சிதான். திண்ணைகளில் இருந்து தமது பழைய கதைகளைப் பேசிமகிழ்கின்ற முதியோர் இப்போது அப்படிச் செய்ய முடியாத நிலை.

இந்நிலையில் இரண்டு வகையான மக்கள் அங்கு உருவெடுத்தனர். ஒருசாரார் 'இறைவன் நம்மைக் கைவிட்டுவிட்டார்' எனும் அவநம்பிக்கையில் வாழ்ந்து வர, அடுத்தசாரார் 'இறைவனே எமக்கு உண்மையான விடுதலையைத்தர முடியும்'' எனும் நம்பிக்கையில் திளைத்திருந்தனர்.

அவர்கள் சுமார் எழுபது வருடங்களின் பின்னர் தமது விடுதலையைப் பெற்று மகிழ்ந்தனர்.

இன்றைய நமது சூழ்நிலையையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல், நம்பிக்கையே பலம் என்பதைப் புரிந்து கொண்டு அதனை மேலும் வளர்க்கச் செயற்படுவோம். இறைவனை விட்டு விலகாமல் அவரை அணுகிச் சேர்வோம்.

அந்த வழியில் உழைப்போம்; வாழ்வோம்; சிந்திப்போம்! செயற்படுவோம்!

''யுத்தங்களையும் கலகங்களையும் குறித்து நீங்கள் கேள்விப்படும் போது, பயப்படாதிருங்கள்; இவைகள் முன்னதாக நிகழ வேண்டியதே. ஆனால் முடிவு உடனே வராது'' — இயேசு (லூக்கா 21:9).

சகோ. பி. தேவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வங்கி முகாமையாளர் பாவித்த நல்ல நிலையில் உள்ள 4ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். செல்வராஜா, 40/1, நொத்தாரிஸ் ஒழுங்கை, அரியாலை. [சி/1327]

சணல் ஆடும், ஏழு மாதம் நிரம்பிய மூன்று சணல் கடாய் ஆடுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மங்களான், கச்சாய் வீதி, சாவகச்சேரி. [சி/1332)

இரண்டு பாவிக்காத புதிய கதவுநிலைகள் (முதிரை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 28, பேரின்பநாயகம் வீதி, யாழ்ப்பாணம். (கச்சேரிக்குப் பின்புறமாக). [49046]

### தவறிவிட்டது

சி. அபிகை என்பவருடைய 607852391V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தட்டாதெருச்சந்திக்கும், சிவலிங்கப்புளியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கா இராஜேஸ்வரக்குருக்கள், ஆனந்தன் வைரவ கோயில், மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [47383]

### திருத்துதல்

புகைப்படத்துறை கருவிகள் அனைத்தும், எலெக்றோனிக் அனைத்தும் திருத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி (ஸ்பெசலிஸ்ற்). 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி, (கன்னாதிட்டிச்சந்தி அருகாமை) யாழ்ப்பாணம். [49008]

### O/L கணிதம் 97

Distinction பெறுபேறடைவதற்கு 20 நாள்களில் 40 மணித்தியாலங்களில் சகல Section களும் Portion களும் நிறை வேற்றப்பட்டு Sections & Portion, Rivis-son உடன் Past Papers Practice கம் அளிக்கப்படும் தொடர்பு: க. ஆறுமுகநாதன். No. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி [49007]

### புலமைப்பரிசில்

1997 ஒகஸ்ட் மாதம் அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்களை Sham-rock Academy மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். Bright Scholar ஆசிரியர் ந. ஆனந்தசபேசன். (49048)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் சுவிற்சர்லாந்தில் தொழில் புரியும் 41 வயது அத்தம் 1ஆம் பாதம் மணமகனுக்கு குறைந்தது o/L படித்த 33 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை sponsor மூலம் அனுப்பலாம். பிறந்த நேரம் சாதக குறிப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 646 C/o உதயன் யாழ்ப்பாணம். [49041]

### வாணி சோதிடம்

வாணி சோதிடம் மீண்டும் சேவையில் ஈடுபட்டுள்ளது. எம்மிடம் கைரேகை, ஜாதகம் குறிப்பு, நினைத்த காரியம், மனை வகுத்தல் போன்றவற்றுடன் திருமாங்கல்ய சேவையும் நடைபெறுகிறது. (தரகர் ஜாதகம் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) தொடர்பு: வாணி சோதிடம், 42, மருதடி வீதி, நல்லூர். சோதிடர் S கணேசன். [48983]

## மின கம்பம் வீழ்ந்து சிறுவன் காயம்

தறித்துக் கொண்டிருந்த மரம் மின் கம்பத்தின் மேல் விழுந்ததால் சரிந்து விழுந்த மின் கம்பத்தினுள் அகப்பட்டு சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

மானிப்பாய் கட்டுடை பிரதான வீதியில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், வீதியால் கடைக்குச் சென்று கொண்டிருந்த சிவலிங்கம் கபில்ராஜ் (வயது 7) என்ற சிறுவனே படுகாயமடைந்தவனாவான்- இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

பிறப்பு: 22-04-1935

இறப்பு: 21-07-1997

### அமரர் பொ. சரவணப்பெருமாள் (பெருமாள்)

எமது அன்புத் தெய்வம் பொ. சரவணப்பெருமாள் 21-07-1997 இல் அமரத்துவமடைந்த செய்தி கேட்டு நேரிலும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், இறுதிக் கிரியைகளின் போது உடனிருந்தும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் (ஞானோதய அக்கடமி) ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து 20-08-97 புதன்கிழமை முற்பகல் நிகழவிருக்கும் கிரியாதிகளில் கலந்துகொண்டு எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் உற்றார், உறவினர், அன்பர்கள், ஞானோதய அக்கடமி ஆசிரியர், மாணவ, மாணவிகள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

ஐயனார் வீதி,
கல்வயல்.
சாவகச்சேரி.

(48977)

உ

நல்லூர்த் திருவிழாவில், நல்லூர் சைவ மகாசபை நடத்தும்

"கந்தபுராணம்" தொடர் இசைச் சொற்பொழிவு



இன்று (17-08-97) ஞாயிறு தொடக்கம் தினமும் மாலை 5-15 மணிக்கு

இடம்: நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபம்.

நிகழ்த்துபவர்:- நல்லைக்குருமணியின் பிரதம சிஷ்யன் கானக தாவாரிதி, முத்தமிழருவி

பிரம்மஸ்ரீ
சிவ. வை. நித்தியானந்த சர்மா

அணிசெய் கலைஞர்கள்
இலங்கை வானொலி புகழ் S. பிச்சையப்பா முகவீணை
மிருதங்க வித்துவான் T. இராஜன் மிருதங்கம்
அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

அனுசரணை:-
சஞ்சீவி பெயின்ற் ஹவுஸ்
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(49038)

மஞ்சத்தில் பவனிவரும்
நல்லை முருகனின் அருள்

எமது வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் நிறைவுடன் கிடைக்கப்பிரார்த்திக்கும்:

★ ஜெயா அழகுமாடம் ★
127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:
149, 168, நவீனசந்தை,
(முன்னைய ஹப்பிரெக்ஸ்)
யாழ்ப்பாணம்.

(சி/1335)

## இதய அஞ்சலி

எமது இரண்டாம் வருட மாணவன்
தேவநேசன் குரூஸ் அவர்களின் தந்தையார்


### பிரான்சிஸ் குரூஸ்

அவர்கள் காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக் கழகம்.

(49047)

## 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்: 02 — 03 — 1940

மறைவு: 19 — 07 — 1997

### அமரர் சுந்தர் செல்வராசா

(விவசாயப் போதனாசிரியர்)

மண்ணதனில் பிறந்திட்ட அனைவருமே
மாண்டிடுதல் உறுதிதான் என்ற போதும்
கண்ணியவான் நற்கடமை வீரன்தன்னை
காலனவன் கவன்றதனைத் தாங்கலாமோ
வெண்மதியாய் செங்கதிராய் ஒளிவீசி
வீடதனில் ஊரதனில் விளங்கி நின்றார்
கண்முன்னே நினைவலைகள் கொண்டுவந்து
காட்டுகின்ற காட்சிகள் அழியாதென்றும்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.
யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம்

(49032)

## 90 ஆவது நாள் நினைவஞ்சலியும் மோட்ச தீப அழைப்பும்



தோற்றம்: 10 — 04 — 1927

மறைவு: 20 — 05 — 1997

### திருமதி இரத்தினம்மா கந்தசாமி

அன்னாரின் இல்லத்தில் இன்று 17-08-97 நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

S. A. கந்தசாமி (கணவர்),
திரு. திருமதி கனக. இராஜேந்திரன்
(மகள் மருமகன்)

தலைவாசல் சந்தி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(49040)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கடல் வலயத் தடை நீக்கம்

**1990** ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி போர் தொடங்கிய சில மாதங்களில், வடக்கு—கிழக்கில் கடல் வலயத் தடை நடைமுறைக்கு வந்தது. இடையிடையே அந்தத் தடை மிகச் சிறிய அளவில் தளர்த்தப்பட்டாலும் பூரணமாக நீக்கப்படவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்ட போதிலும், கடல் வலயத் தடை ஓரளவே நீக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட கடற்பரப்பில் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கே கடற்றொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதனால் மேற்படி தொழிலையேதமது ஜீவனோபாயத்துக்குத் தங்கியிருக்கும் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். அவர்களின் தொடர் இன்னல்களைப் போக்கும் விதத்தில் குடாநாட்டில் கடல் வலயத் தடையை முற்றாக நீக்குவது குறித்து கொழும்பில் உயர் மட்டத்தில் ஆராயப்படுவதாகப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டில் கடல் வலயத் தடையை நீக்குவது குறித்து ஆராயப்படும என்று கடற்படையின் காரைநகர் தளபதி சந்தகிரி, தம்மை மிக அண்மையில் சந்தித்த ஈ. பி. டி. பி. தூதுக் குழுவிடம் தெரிவித்திருந்தார்.

ஆராயும் நிலையைத் தாண்டி கடல் வலயத்தடை நீக்கப்படுவதற்கான முடிவு விரைவில் எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

குடாநாட்டில் கடற்றொழில் கட்டுப்படுத்தப்பட்டதால் அதனை நம்பி வாழ்பவர்கள் மட்டுமன்றி நுகர்வோரும் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட ''சீசன்'' காலத்திற் கூட அதிக விலைக்கே மீன் வகைகளை வாங்கும் நிலை நீடிக்கிறது.

அத்தோடு கடல் வளம் மூலம் குடாநாட்டுக்குக் கிடைக்கும் பயன்பாடு குறைந்து, பொருளாதாரமும் தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருகிறது. வடக்கில் இருந்தும் குறிப்பாகக் குடாநாட்டில் இருந்தும் பெருமளவில் மீன்வகைகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்த காலம் ஒன்று உண்டு—

குடாநாட்டு மீனவருக்கு நீண்டகாலமாக அரச மானியங்களும் கிடைக்கவில்லை. சென்ற வருடத்துக்குரிய மானியம் அண்மையில் 500 மீனவருக்கு மட்டும் வழங்கப்பட்டது. இந்த நிலை உகந்ததல்ல. குடாநாட்டின் சகல மீனவர்களும் மானியம் பெறுவதற்கு வகை செய்ய வேண்டும்.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டில் கடற்றொழில் துறைக்கு ஏற்பட்ட பாதிப்புகள், வீழ்ச்சிகளை ஈடு செய்யும் விதத்தில் பல புதிய ஊக்குவிப்புத் திட்டங்கள் இங்கு விஷேடமாக அறிமுகப் படுத்தப்பட வேண்டும்.

இவை எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கூட, கடற்றொழில் மீதான கட்டுப்பாடு நீக்கப்படுவதும் அத்தொழிலைச் செய்வோரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதும் மிகவும் முக்கியம். குடாநாட்டில் கடற்றொழில் அபிவிருத்திக்கு அவை இரண்டும் பிரதான தூண்களாக அமைய முடியும்.

## 1994 இல் இடைநிறுத்தப்பட்ட
# கடும் பாதிப்புற்றோருக்கான
# கொடுப்பனவு மீள கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக. 17

1994 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணக் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படவிருக்கிறது.

இந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப்பணக் கொடுப்பனவு முடிவடைந்ததும் தொடர்ச்சியாக ஒரு கோடி ரூபா வீதம் வழங்கப்படவிருக்கிறது.

வன்செயல் சம்பவங்களின் போது உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் —

காயமடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும்— வழங்கும் இந்த நிவாரணத் திட்டம் 94 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்டதால் சுமார் ஆறாயிரம் பேர் இக்கொடுப்பனவைப் பெறவில்லை.

விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் இக்கொடுப்பனவை வழங்க யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(இ-3)

## இறைச்சித் தேவைக்கான மாடுகளுக்குத் தட்டுப்பாடு

குருநகர், ஒக. 17

குடாநாட்டில் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படும் கால்நடைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக இறைச்சிக்கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இடத்துக்கு இடம் இறைச்சியின் விலையில் வேறுபாடு காணப்படுகிறது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் இருந்து ஆடு மாடுகளை இங்கு கொண்டு வருவது தடைப்பட்டிருப்பதாலேயே கால்நடைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆடுகளை விட மாடுகளுக்கே தட்டுப்பாடு அதிகமாக உள்ளது.

சின்னக் கடைப் பகுதி இறைச்சிக் கடைகளில் மாட்டிறைச்சியின் விலை கடந்த வாரம் சற்று உயர்ந்துள்ளது.

முள்ளுடன் இறைச்சி கிலோ 110 ரூபாவாகவும், தனி இறைச்சி கிலோ 130 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

(ஐ-51)

## தமிழ்மொழி அமுலாக்கல் தடையாகஇருப்பதுஎது?

கொழும்பு, ஓகஸ்ட் 17

"மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால் மொழிக் கொள்கையை அமுல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது."

இப்படி ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் தம்மிகா அமரசிங்க தெரிவித்தார்.

மொழிக் கொள்கையை விரைவாக அமுல் செய்யுமாறும் —

அது தொடர்பான அறிக்கையை அமைச்சர்களிடம் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் பெறுமாறும் — ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

போதிய மொழிபெயர்ப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள் இல்லாத காரணத்தால் தமிழ் மொழி அமுலாக்கலை மேற்கொள்ள முடியாமலுள்ளதாக அமைச்சர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3-150)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

#### மஞ்சத்தில் வடிவேலன்!!

அஞ்சலென அரவணைக்கும்
கந்தனே வா! வா!!
பஞ்சமுகன் பாசமிகு
தம்பியே வா! வா!!
வெஞ்சமரில் வேலெடுக்கும்
வீரனே வா! வா!!
தஞ்சமளி நல்லூரின்
நாதனே வா! வா!!
வஞ்சம் வினை சூழ்ச்சி பலி
மாண்டிடவே வா! வா!!
மஞ்சமதில் மஞ்ஞைதனில்
ஏறியே வா! வா!!

- அனலையூர்ச் சேந்தன்

#### நல்லைக் கந்தனை நாடு!

நெஞ்சமே கலங்கி நிற்கும் என்நெஞ்சமே ஓடு ஓடு
கொஞ்சிடும் தமிழால் கந்தன் புகழினைப் பாடு பாடு
மஞ்சத்தில் தோன்றும் முத்துக் குமரனை நாடு நாடு
அஞ்சிடும் நிலைமை போக்க அருளினைத் தேடு தேடு!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

#### நெஞ்சில் கருணையைக்காட்டையா!

எடுப்பு

அஞ்சித் தவிக்கின்ற அவலத்தின் மத்தியில்
மஞ்சத் தெழுகின்ற நல்லூரா - முருகா
கெஞ்சித் துதிக்கின்றோம் வேளையா!
(அஞ்சித்)

தொடுப்பு

விஞ்சிப் பரவிடும் வேதனை தீர்ந்திட
நெஞ்சில் கருணையைக் காட்டையா - எமக்குத்
தஞ்சம் நீயலால் யாரையா
(அஞ்சித்)

முடிப்பு

நஞ்சை மிடற்றினில் அப்பனுக் கடக்கிய
வஞ்சி பார்வதி வேலையா துயர்கள்
அஞ்சி ஓடிட அருளையா
(அஞ்சித்)

எஞ்சிக் கிடப்பதும் நம்பகம் ஒன்றுதான்
வஞ்சித் திடாதீர் முருகையா உம்மை
விஞ்சிக் [illegible]
(அஞ்சித்)

- முருகனடியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் ஆலயச் சூழலில் சுகாதாரம் பேண அறிவுறுத்து

கொழும்புத்துறை, ஒக. 17

நல்லூர் ஆலயச் சூழலில் உணவு விடுதிகளையும், சிற்றுண்டி விற்பனை நிலையங்களையும் அமைத்துள்ளோர் உரிய சுகாதார விதிமுறைகளைப் பேணுமாறு யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் கேட்டுள்ளார்.

உணவு மூலம் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் உரிய வழிமுறைகளைப் பின்பற்றுமாறு குளிர் களி நிலையங்களின் உரிமையாளர்களையும் அறிவுறுத்தியுள்ளார்.

பொது மக்கள் அதிக எண்ணிக்கையில் கூடும் இடங்களில் பொதுச் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

(ஐ-30)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஒக. 17

நல்லூர் உற்சவ கால தொண்டர் சேவை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு நல்லூர் சிவன் ஆலயம் முன்பாக உள்ள இந்து இளைஞர் பேரவைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்து இளைஞர் மன்றம், பாடசாலை இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-30)

## விபத்தில் படுகாயம்

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்தவர் திடீரென விழுந்து படுகாயமடைந்தார்.

மானிப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ் விபத்தில் தம்பிப்பிள்ளை பிரகாஷ் (வயது 18) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## பருத்தித்துறை — யாழ் பஸ்சேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக. 17

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இராணுவப் பாதுகாப்புடன் சேவையில் ஈடுபடும் பஸ் சேவையில் நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து தினமும் காலை 7.15 மணிக்கும், 7.45 மணிக்கும் இரு தடவை இந்த பஸ் சேவை இடம் பெற்று வந்தது.

இதில் 7.45 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்படும் பஸ் சேவை இனிமேல் அதே நேரம் நெல்லியடி பஸ் நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கரவெட்டி, நெல்லியடிப் பகுதி மக்களின் வசதி கருதி இந்நேர, இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் புதிய நடைமுறைப்படி காலை 7 15 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து ஒரு பஸ்வண்டியும், 7 45 மணிக்கு நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து ஒரு பஸ்வண்டியும் நேற்று முதல் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த பஸ்வண்டிகள் மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் நேரத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

(ஐ-15)

## சமய சந்நிதிகளில்

தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

(ஐ-111)

★ ★ ★

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். நாளை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(ஐ-4)

★ ★ ★

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 10 ஆவது திருவிழாவான திருமஞ்சத் திருவிழா இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

(ஐ-5)

## முன்பள்ளி ஆசிரியருக்கு

வலிமேற்கு சங்கானை பிரதேசசெயலர்பிரிவில்இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களை நாளைமறுதினம் செவ்வாய் காலை 8 30 மணிக்கு அவர்களது சுயவிவரத்துடன் சங்கானைக் கல்விக்கோட்டத்துக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## நாளை

**ஆவணி 2**

**திங்கட்கிழமை**

திதி: பூரணை மாலை 5.36 வரை.

நட்சத்திரம்: அவிட்டம் பின்னிரவு 2.28 வரை.

சுபநாள்

யசுர்வேத உபாகருமம்

பூரணை விரதம்

சுபநேரம்: 12.05 - 1.35

ராகுகாலம்: 7.35 - 9.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

# ரூ.1 கோடி 80 லட்சம் பெறுமதியான அபி. திட்டங்கள் குறித்து இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக. 17

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 2 கோடி 50 லட்சம் ரூபாவில் 1 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட இணைப்புக் குழுத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கொழும்பில் நடந்த கூட்டத்தில் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. டி. பி. அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடு குறித்து இன்னும் திட்டங்கள் இனங்காணப்படவில்லை என்றும்—

விரைவில் அவர்களின் ஒதுக்கீடு தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் இனங்காணப்பட்டுள்ள திட்டங்களை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## இந்து ஆலயங்களை பதிவு செய்யும் பணி

### கிராம அலுவலர்கள் மூலம் ஆரம்பம்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இந்து ஆலயங்களைப் பதிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கலாசார உத்தியோகத்தர்களும் கிராம அலுவலர்களும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதுவரை கலாசார அமைச்சில் பதிவு செய்யப்படாத இந்து ஆலயங்களின் நிர்வாகிகள் கிராம அலுவலர்களுடனோ அல்லது கலாசார உத்தியோகத்தருடனோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## கல்விக் கல்லூரிக்கு மாணவரை அனுமதிக்க நேர்முகப்பரீட்சை

### இன்று தொடக்கம் நடைபெறும்

யாழ்ப்பாணம். ஒக. 17

மட்டக்களப்பு, வவுனியா கல்விக்கல்லூரிக்கு 1997—98 கல்வி ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று முதல் நாளை மறுதினம் வரை யாழ். வலயம் ஒன்று அலுவலகத்தில் நடைபெறும்.

ஏற்கனவே இதற்கான அழைப்புக் கடிதங்கள் கிடைத்தவர்கள் இத்தினங்களில் ஏதாவது ஒரு தினத்தில் உரிய ஆவணங்களுடன் காலை 9-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் இடையில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த நேர்முகப்பரீட்சைகள் கடந்த 10 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் நடைபெறுவதாக இருந்தது. நேர்முகப் பரீட்சையை நடத்துகின்ற குழுவினர் யாழ். வருவதில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக நேர்முகப்பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. (இ-3-5)

## ஜே. 201 அ. அட்டை

யாழ்ப்பாணம், ஒக. 17

ஏழாலை மேற்கு (ஜே/201) கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான விசேட அடையாள அட்டை நாளை காலை 9 மணி முதல் புன்னாலைக்கட்டுவன் சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அப்பகுதி கிராம சேவையாளர் தெரிவித்தார். (இ-3)

## அரசியலில் ஈடுபடும் எண்ணம் அர்ஜுனாவுக்குக் கிடையாது

கொழும்பு, ஒகஸ்ட் 17

"அரசியலில் ஈடுபடும் ஆர்வம் எனக்கு இல்லை."

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை - இந்திய அணிகளின் வீரர்களுக்கு இந்தியத் தூதர் ஏற்பாடு செய்த விருந்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

"நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனும் அல்லன். எந்தக் கட்சியை ஆதரிப்பவனும் இல்லை." என்றும் அவர் கூறினார். (இ-8-150)


யாழ். நகரில்

இன்னிசை நற்செய்தி பெருவிழா

உலகப் பிரசித்தி பெற்ற பாடகர்

அருட்தந்தை பேர்க்மான்ஸ் அவர்கள்

இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மைதானம்
நாள்: இன்றும், நாளையும் (ஆகஸ்ட் 17-18)
நேரம்: தினமும் மாலை 4.00மணி (புதிய நேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசம் இலவசம்!

(48959)


## பரலோக அன்னை திருவிழா

யாழ்ப்பாணம், ஒக. 17

நீர்வேலி புனித பரலோக அன்னை ஆலய திருநாள் பலியும், திருச்சுரூப பவனியும், ஆசிரும் இன்று ஞாயிறு காலை 7-30 மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

கடந்த 8ஆம் திகதி ஆரம்பமான ஆலய நவநாள் வழிபாட்டின் இறுதிநாள் திருப்பலி யாழ். ஆயரின் செயலர் அருட்திரு அருமைநாயகம் அடிகள் தலைமையில் நடைபெறும்.

பங்குத்தந்தை அருட் திரு. க. அருள்நேசன் அடிகளார் அருளுரை வழங்குவார். (இ-3)

## பிரதேச செயலகத்தில் கொள்ளை

வவுனியா, ஒக. 17

குச்சவெளி பிரதேச செயலக அலுவலகத்துக்குள் நேற்றுக்காலை புகுந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் 36 ஆயிரம் ரூபா பணத்தைக்கொள்ளையடித்துச் சென்றனர். (இ-3-163)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

வித்தனர்.

கொழும்பு கன் ஆஸ்பத்திரிக்கு சமீபமாக உள்ள லிப்டன் சந்தியில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் 'இந்த அரசு ஆட்சிக்கு வந்து உருப்படியான எதையும் மேற்கொள்ளவில்லை. அரசாங்கம் அமைதியாக இருக்கிறது. மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்' என்றார். (இ-3-10-21)

## முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்)

துண்டுகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன.

பாண் விலையை 3 ரூபா 50 சதமாக்குவதாக வாக்குறுதி அளித்து அரசு பதவிக்கு வந்தது. ஆனால் தற்போது 7 ரூபா 50 சதமாக பாண்விலை உயர்த்தப்பட்டுள்ளது. (இ-3)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தியுடையவை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல்களைப் பயன்படுத்தி இவ்வாரத்தில் பயணிகள் சேவையை ஆரம்பிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஆயுத விற்பனையில் அமெரிக்கா முதலிடம்!

லண்டன், ஒகஸ்ட் 17

கடந்த ஆண்டு ஆயுத விற்பனையில் அமெரிக்கா முதலிடத்தை வகிக்கிறது.

அதேபோல் கடந்த ஆண்டு அமெரிக்கா தனது ஆயுத விற்பனையில் மூன்றில் இரண்டு பங்கை மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்த வறிய நாடுகளுக்கே விற்றுள்ளது என அமெரிக்க காங்கிரஸ் தயாரித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆயுத விற்பனையில் பிரிட்டன் இரண்டாவது இடத்தையும் ரஷ்யா மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. (இ-10)

## மன்னார் வரும் பயணிகள் வெளியிடம் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் மன்னார் வரும் பயணிகள் உடனடியாக பஸ் மூலம் வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களுக்குச் செல்ல விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

'தராகி' கப்பல் மூலம் மன்னார் வரும் பயணிகள் பொலீஸாரின் சோதனை முடிந்ததும், பாஸ் வழங்கப்பட்டு உடன் பஸ் மூலம் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அதே நேரம் —காங்கேசன் துறையில் இருந்து 246 பயணிகளுடன் நேற்று மன்னார் வந்த 'தராகி' கப்பல் 290 பயணிகளுடன் காங்கேசன் துறை நோக்கிப் புறப்பட்டது. (இ-3-164)

## பட்லந்த வதை முகாம்:

## முன்னாள் அமைச்சர்கள் இருவர் மீது விசாரணை

கொழும்பு, ஒக. 17

பட்லந்த வதை முகாம் தொடர்பான விசாரணை நடத்திவரும் விசாரணைக் குழுவினர் கடந்த அரசில் அமைச்சர்களாக இருந்த இருவரை விசாரணை செய்து வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களுமான ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரே விசாரிக்கப்பட்டவர்களாவர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி பட்லந்த ஆணைக்குழு கூடவிருக்கிறது. அன்று சிலர் சாட்சியம் அளிப்பர். (இ-3-150)

## புளியங்குளம் பகுதியில் மோதல்

வவுனியா, ஒக. 17

நேற்றுக் காலை புளியங்குளம் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரு படையினர் உயிரிழந்தார்; ஒருவர் காயமடைந்தார். (இ-3-164)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக. 17

கொக்குவில் சங்கீர்த்தா நவீன பாலர் பாடசாலையின் 5 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 8 30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ)

## ரயில்ஊழியரும் வேலை நிறுத்த முஸ்தீபு!

கொழும்பு, ஒக. 17

சம்பள உயர்வு கோரி போக்குவரத்துச் சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளை ரயில்வே ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'ரயில்வே தொழில்நுட்ப சேவை' என்ற பெயரை நீக்குவது உட்பட சில கோரிக்கைகளை ரயில்வே தொழிற் சங்கங்கள் முன்வைத்துள்ளன. பெயரை மாற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அமைச்சரவை நிராகரித்து விட்டது. இதனையடுத்து ரயில்வே ஊழியர்கள் எந்நேரமும் வேலை நிறுத்தத்தில் குதிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கைத் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்னையில் உள்ள வீடு ஒன்றைத் திடீர் சோதனை நடத்திய பொலீஸார் அந்த வீட்டில் இருந்து இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர் கரன்ஸிகளைக் கைப்பற்றியதாகவும் —

அதன் பின் அவ்வீட்டில் இருந்த அந்த அமைப்பின் முக்கியஸ்தர் கைது செய்யப்பட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இவ்வளவு தொகையான பணத்தை எப்படித் தமிழ் நாட்டுக்குள் அவர் கொண்டு வந்தார் என்பது குறித்துப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-3-21)

## புது விளாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

புதூர் நாகதம்பிரான் ஆலயப் பகுதியில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் அமைக்கப்பட்ட முகாம் மூடப்பட்டதை அடுத்து இவர்கள் இப்பகுதியில் தங்கியிருந்தனர்.

வவுனிக்குளத்திலும் இதே தினம் கிபிர் விமானத் தாக்குதல் இடம் பெற்றதும் —

இத்தாக்குதலில் 9 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதும்—தெரிந்தவையே. (இ-3-164)

## பூந்தோட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதில் 6 இளைஞர்களும், ஒரு யுவதியும் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் யுவதியை விடுதலை செய்த படையினர் 6 இளைஞரையும் முகாம் கொண்டு சென்றனர்.

இதையடுத்து அந்த முகாமில் பதற்றம் நிலவுகிறது. (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org